**இனிமையான குழந்தைகளே உங்களுக்கு இப்பொழுது சாந்தி தாமம் மற்றும் சுக தாமம் செல்வதற்கான ஆதாரம் (வழி) கிடைத்துள்ளது. நீங்கள் தந்தையை நினைவு செய்து செய்து, தூய்மை அடைந்து, கர்மாதீதராகி (கர்ம கணக்குகளை முடித்து) தங்களது சாந்தி தாமம் சென்று விடுவீர்கள்.**

கேள்வி: தந்தையின் செல்லம் எந்த குழந்தைகளுக்குக் கிடைக்கிறது? எப்படி தந்தையை வெளிப் படுத்துவீர்கள்?

பதில்: எந்த குழந்தைகள் விசுவாசம் உடையவர்களாக, சேவை செய்யக் கூடியவர்களாக (சர்விசபிள்) மற்றும் மிகவும் இனிமையானவர்களாக இருக்கிறார்களோ, ஒரு பொழுதும் யாருக்குமே துக்கம் கொடுப்பதில்லையோ அப்பேர்ப்பட்ட குழந்தைகளுக்கு தந்தையின் செல்லம் (கொஞ்சுதல்) கிடைக்கிறது. குழந்தைகளாகிய உங்களுக்குள் மிக மிக அன்பு இருக்கும் பொழுது ஒரு பொழுதும் தவறுகள் ஏற்படாதிருக்கும் பொழுது, வாயிலிருந்து துக்கம் கொடுக்கக் கூடிய வார்த்தைகள் வெளிப்படாதிருக்கும் பொழுது, மேலும் எப்பொழுதும் சகோதர சகோதரரின் ஆன்மீக அன்பு இருக்கும் பொழுது தான் தந்தையை வெளிப்படுத்த முடியும்.

பாடல்: எனக்கு ஆதாரம் அளிப்பவரே.. .. .. ..

ஓம் சாந்தி. பாடலையோ குழந்தைகள் நிறைய முறை கேட்டுள்ளார்கள். வருவது போவது என்ற சக்கரத்தில் நாம் எவ்வளவு அலைந்து விட்டுள்ளோம் என்பதை குழந்தைகள் புரிந்துள்ளார்கள். நாடகத் திட்டபடி ஒரு சரீரம் விட்டு மற்றொன்றை எடுத்தீர்கள். சுக தாமத்தில் சுய விருப்பத் துடனேயே மகிழ்ச்சியுடன் ஒரு சரீரம் விட்டு மற்றொன்றை எடுத்துக் கொண்டிருந்தீர்கள். இப்பொழுது தந்தை குஷியுடன் சரீரத்தை விடுவதற்காகப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். ஆத்மாக்களாகிய நாம் பரந்தாமத்திலிருந்து வந்துள்ளோம். ஆத்மாக்களாகிய நாம் இங்கு பாகத்தை நடிக்கிறோம் என்பதை குழந்தைகள் புரிந்துள்ளார்கள். முதன் முதலில் ஆத்மாக்களாகிய நாம் அழிவற்றவர்கள் ஆவோம் என்று ஆத்மா பற்றிய நிச்சயம் வேண்டும். ஆதாரம் அளிப்பவர் ஒரே ஒரு தந்தை ஆவார் என்பது குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது. தந்தையை நினைவு செய்வதால் மிகுந்த குஷி ஏற்படுகிறது. இது மிகவும் புரிந்துக் கொள்ள வேண்டிய வி^யங்கள் ஆகும். முதலில் எல்லோரும் சாந்திதாமத்தில் இருக்கின்றீர்கள். பிறகு முதலில் சுகதாமத்தில் வருகிறீர்கள். தந்தை உங்களுக்கு ஆதரவு அளிக்கிறார். குழந்தைகளே ! உங்களுடைய சாந்தி தாமம், சுகதாமம் வந்தே விட்டது போலத் தான். நாம் ஆத்மாக்கள் ஒரு சரீரம் விட்டு மற்றொன்றை எடுக்கிறோம் என்ற நிச்சயமோ உள்ளது. முன்கூட்டியே அழியாத பாகம் கிடைத்து விட்டுள்ளது. நீங்கள் இந்த 84 பிறவிகளின் பாகத்தை நடிக்க வேண்டி உள்ளது. தந்தை குழந்தை களிடம் தான் உரையாடுகிறார். ஏனெனில் இந்த விசயங்களை உங்களைத் தவிர வேறு யாரும் அறியாமலே உள்ளார்கள். இந்த புருஷோத்தம சங்கமயுகத்தில் தான் புருஷோத்தமராக ஆக்குவதற் காக தந்தை வழி கூறுகிறார். ஆத்மாவிற்கு எந்த ஒரு பயமும் இருக்கக் கூடாது. நாமோ மிகவுமே உயர்ந்த பதவி அடைகிறோம். நீங்கள் அனைத்து பிறவிகளையும் அறிந்து விட்டுள்ளீர்கள். இது கடைசி பிறவி ஆகும். நமக்கு சாந்திதாமம் சுகதாமம் செல்வதற்காக ஆதரவு கிடைத்துள்ளது என்பதை

ஆத்மா புரிந்துள்ளது. எனவே குஷியுடன் செல்ல வேண்டும். ஆனால் ஆத்மா பதீதமாக (தூய்மையற்றதாக) உள்ளது என்ற இந்த ஞானம் இப்பொழுது கிடைத்துள்ளது. ஆத்மாவின் சிறகுகள் ஒடிந்து விட்டுள்ளன. மாயை சிறகுகளைத் துண்டித்து விடுகிறது. எனவே திரும்பிச் செல்ல முடியவில்லை. அவசியம் தூய்மையாக வேண்டும். அங்கிருந்து கீழேயோ வந்து விட்டீர் கள். ஆனால் இப்பொழுது தாமாகவே திரும்பிச் செல்ல முடியாது. அனைவரும் பாகத்தை நடித்தே ஆக வேண்டும். நீங்களும் இவ்வாறே உணர்ந்திருக்க வேண்டும். நாங்கள் மிகவும் உயர்ந்த குலத்தினர் ஆவோம். இப்பொழுது நமக்கு மீண்டும் உயர்ந்த பரம்பரையின் இராஜ்ய பாக்கியம் கிடைக்கிறது. பின் நாம் இந்த சரீரத்தை என்ன செய்யப் போகிறோம்? நமக்கு புதிய சரீரமோ அங்கு கிடைக்க வேண்டி உள்ளது. இது போல உங்களிடமே உரையாடுங்கள். தந்தை தன்னுடைய அறிமுகத்தை அளித்துள்ளார். ஆத்மா தான் சதோ பிரதானம், சதோ, ரஜோ, தமோவில் வருகிறது என்று படைப்பினுடைய முதல் இடை கடை பற்றிய இரகசியத்தையும் புரிய வைக்கிறார். இப்பொழுது மீண்டும் ஆத்ம அபிமானி (ஆத்ம உணர்வுடையவர்) ஆக வேண்டி உள்ளது. ஆத்மா தான் தூய்மையாக ஆக வேண்டி உள்ளது. என் ஒருவனை மட்டுமே நினைவு செய்யுங்கள், வேறு யாரையுமே நினைவு செய்யாதீர்கள் என்று தந்தை கூறி உள்ளார். பணம், செல்வம், மாளிகை, குழந்தைகள் ஆகியவற்றில் புத்தி சென்றது என்றால் கர்மாதீத் நிலையை அடைய முடியாது. பிறகு பதவி குறைந்து போய் விடும் மற்றும் பின் தண்டனைகளும் வாங்க வேண்டி வரும். இப்பொழுது ஆத்மாக்களாகிய நாம் வீடு திரும்ப வேண்டி உள்ளது. தூய்மையாகித் திரும்ப வேண்டும். தந்தை தூய்மையானவர்களாக ஆக்க வந்துள்ளார். எனவே நமது விகர்மங்கள் விநாசம் ஆகி விடும் அளவிற்கு நாம் ஏன் குஷியுடன் தந்தையை நினைவு செய்யக் கூடாது. சுயம் நினைவு செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் தான் மற்றவர்களுக்குக் கூறும் பொழுது அம்பு போல பதியும். இதற்கு சிந்தனைக் கடலை கடைவது என்று கூறப்படுகிறது. காலையில் ஞான மனனம் நன்றாகச் செய்ய முடியும். ஏனெனில் புத்தி நன்றாக இருக்கும். புத்துணர்வு கூடியதாக இருக்கும். பக்தி கூட அந்த சமயத்தில் செய்கிறார்கள். எனது மனமே, அதிகாலை எழுந்து இராமனை நினைப்பாய் என்று பக்தி மார்க்கத்திலோ பாடல் மட்டும் பாடிக் கொண்டிருந்தோம். இப்பொழுது அதிகாலை எழுந்து என்னை நினைவு செய்யுங்கள் என்பது தந்தையினுடைய உத்தரவு ஆகும். சத்யுகத்திலோ இராமரை நினைவு செய்வதில்லை. இவை எல்லாமே நாடகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தந்தை வந்து ஞானம் மற்றும் பக்தியின் ரகசியத்தைப் புரிய வைக்கிறார். முதலில் நீங்கள் அறியாமல் இருந்தீர்கள். எனவே கல்புத்தி என்று கூறப்படுகிறது. சத்யுகத்தில் இது போல கூற மாட்டார்கள். இறைவன் உங்களுடைய புத்தியை நல்லதாக ஆக்கி விடட்டும் என்று இச்சமயத்தில் தான் கூறுகிறார்கள். இங்கு இருக்கும் பாடல் பிறகு பக்தி மார்க்கத்தில் வருகிறது. எனவே குழந்தைகளே! நீங்கள் எல்லையில்லாத தந்தையாகிய என்னை மறந்து விட்டுள்ளீர்கள் என்று தந்தை குழந்தைகளுக்கு மிகவும் அன்புடன் புரிய வைக்கிறார். நான் தான் உங்களுக்கு அரைக் கல்பத்திற்காக எல்லையில்லாத ஆஸ்தி அளித்திருந்தேன். நான் தான் உங்களை எல்லையில்லாத சந்நியாசம் செய்வித்திருந்தேன். இந்த முழு பழைய உலகம் சுடுகாடு போல் ஆகப்போகிறது என்று நான் தான் கூறி இருந்தேன். எது முடியப் போகிறதோ அதை ஏன் நினைவு செய்கிறீர்கள்? பாபா எங்களை தூய்மை இல்லாத உலகத்திலிருந்து விடுவித்து பாவன உலகத்திற்கு அழைத்துச்

செல்லுங்கள் என்றே நீங்கள் அழைக்கிறீர்கள். தூய்மை இல்லாத உலகத்தில் கோடிக்கணக்கான மனிதர்கள் இருக்கிறார்கள். தூய்மையான உலகத்தில் மிகவும் குறைவாக இருப்பார்கள். எனவே காலன்களுக்கெல்லாம் காலன், மகா காலனை அழைக்கிறார்கள் அல்லவா? பக்தியின் பலனைக் கொடுங்கள் என்று பக்தர்கள் பகவானை அழைத்தார்கள். நாம் மிகவுமே அடி வாங்கி உள்ளோம். அரைக் கல்பத்தின் பழக்கம் ஏற்பட்டுள்ளதால் அதை விடுவதில் உழைப்பு ஏற்படுகிறது. இதுவும் நாடகத்தில் பொருந்தி உள்ளது. குழந்தைகள் வரிசைகிரமப்படி புருஷார்த்தத்திற்கேற்ப தங்களது கர்மாதீத நிலையை முந்தைய கல்பத்திற்கேற்ப அடைகிறார்கள். பிறகு விநாசம் ஆகிவிடும். இப்பொழுதோ வசிப்பதற்கே இடமில்லை. உணவுப் பொருள் இல்லை என்றால் எங்கிருந்து சாப்பிடுவார்கள். கோடிக்கணக்கான மனிதர்கள் பசியால் இறப்பார்கள் என்று அமெரிக்காவிலும் கூறுகிறார்கள். இந்த இயற்கை சேதங்களோ ஆக வேண்டியே உள்ளது. போர் மூண்டு விட்டால் தானியங்கள் எங்கிருந்து வரும். யுத்தம் கூட மிகவும் பயங்கரமாக இருக்கும். என்னவெல்லாம் அழிவு ஏற்படுத்தும் பொருட்கள் அவர்களிடம் தயாராக உள்ளதோ அவற்றை எல்லாம் வெளியில் எடுப்பார்கள். இயற்கை சேதங்களும் கூட உதவி செய்யும். அதற்கு முன்பாக கர்மாதீத நிலையை அடையவேண்டும். கருமையிலிருந்து வெண்மையாக ஆக வேண்டும். காம சிதையில் அமர்ந்து கருமையாக ஆகி விட்டுள்ளீர்கள். இப்பொழுது தந்தை அழகானவர்களாக மாற்றுகிறார். ஆத்மாக்கள் இருப்பதற்கான புகலிடமோ ஒன்றே ஒன்று தான் அல்லவா? இங்கு வந்து பாகத்தை நடிக்கிறீர்கள். இராம ராஜ்யம் மற்றும் இராவண ராஜ்யத்தைக் கடந்து செல்கிறீர்கள்.

பழைய உலகத்திற்கு முடிவு ஆகும் என்று இப்பொழுது தந்தை கூறி உள்ளார். நான் வருவதே கடைசியில், குழந்தைகள் அழைக்கும் பொழுது. பழைய உலகத்தின் விநாசம் அவசியம் ஏற்பட வேண்டி உள்ளது. மிருகங்கள் இறக்க... (வேடன் மகிழ்ச்சியாக இருப்பான்) என்ற பாடலும் உள்ளது. ஆனால் தந்தையின் ஸ்ரீமத்படி நடக்கவில்லை என்றால் அந்த குஷி இருக்க முடியாது. நாம் இந்த சரீரத்தை விட்டு விட்டு அமரபுரிக்குச் செல்ல வேண்டும். உங்களுடைய பெயரே சக்தி சேனை, சிவ சக்திகள் என்பதாகும். பிறகு நீங்கள் பிரஜாபிதா பிரம்மா குமாரர்கள் மற்றும் குமாரிகள் ஆவீர்கள். சிவனுக்கோ குழந்தைகளாக இருக்கிறீர்கள். பின் சகோதர சகோதரி ஆகிறீர்கள். பிரஜா பிதா பிரம்மா மூலமாகத் தான் படைப்பு படைக்கப்படுகிறது. பிரம்மாவிற்கு கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் கொள்ளு பாட்டனார் என்று கூறுகிறார்கள். எனவே தந்தை ஆத்மாக்களுக்கு வந்து புரிய வைக்கிறார். ஆத்மா தான் சரீரம் மூலமாக எல்லாமே செய்கிறது ஆத்மாவின் சரீரத்தை தான் அடிக்கிறார்கள். ஆக நான் இந்த சரீரத்தின் மூலமாக இந்த ஆத்மாவின் சரீரத்தை அடித்தேன் என்று ஆத்மா கூறும். நான் ஆத்மா சரீரத்தின் மூலம் இந்த தவறு செய்தேன் என்று குழந்தைகள் கடிதங்களில் எழுதுகிறார்கள். உழைப்பு உள்ளது அல்லவா? இதில் சிந்தனைக் கடலை கடைய வேண்டும். ஆண்களுக்கு மிகவும் சுலபமாகும். மும்பையில் எவ்வளவு பேர் அதிகாலையில் உலாவச் செல்கிறார்கள். நீங்களோ தனிமையில் சிந்தனைக் கடலைக் கடைய வேண்டும். பாபாவை மகிமை செய்து கொண்டே இருங்கள். பாபா என்னே உங்களுடைய அற்புதம்? தேகதாரிக்கு மகிமை பாடப் படுவதில்லை. (விதேஹி) தேகமற்றவர் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் ஆவார். அவர் ஒரு பொழுதும் தன்னுடையதென்று தேகம் எடுப்ப

தில்லை. நான் சாதாரண உடலில் பிரவேசம் செய்கிறேன் என்று சுயம் கூறுகிறார். இவர் (பிரம்மா) தனது பிறவி களைப் பற்றி அறியாமல் இருக்கிறார். நீங்களும் அறியாமல் இருந்தீர்கள். இப்பொழுது இவர் என் மூலமாக அறிந்துள்ளார். பின் நீங்களும் அறிந்து விட்டுள்ளீர்கள். எனவே இதுவும் அப்பியாசம் ஆகும். தந்தையை நினைவு செய்வதால் உங்களுக்கு மிகுந்த குஷி இருக்கும். தங்களை ஆத்மா என்று நிச்சயம் செய்தீர்கள் என்றால் ஆத்மாவைத்தான் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். பிறகு விகாரத்தின் எந்த ஒரு விஷயமுமே எழ முடியாது. அசரீரி பவ என்று தந்தை கூறுகிறார். பிறகு ஏன் தான் குற்றமுள்ள எண்ணங்கள் எழுகின்றனவோ? சரீரத்தைப் பார்ப்பதால் விழுந்து விடுகிறார்கள். ஆத்மாவைப் பார்க்க வேண்டும். நாம் ஆத்மாக்கள் ஆவோம். நாம் இந்த பாகத்தை நடித்துள்ளோம். இப்பொழுது அசரீரி பவ என்று தந்தை கூறி உள்ளார். என்னை நினைவு செய்தீர்கள் என்றால் பாவங்கள் அழிந்து விடும். மேலும் நினைவு யாத்திரையில் இருப்பதால் வருமானமும் சேமிப்பு ஆகும். அதிகாலை நேரம் மிகவும் நல்ல நேரம் ஆகும். பாபாவைத் தவிர வேறு யாரையும் பார்க்கக் கூட வேண்டாம் அவ்வளவே. மற்றபடி இந்த இலட்சுமி நாராயணர் (நமது நோக்கம்) இலட்சியம் ஆவார்கள். மன்மனா பவ, மத்யாஜீ பவ - இதன் பொருள் யாருக்குமே தெரியாது.

பக்தி இருப்பதே இல்லற மார்க்கத்தினருக்காக என்பதை நீங்கள் புரிய வைக்கலாம். இந்த துறவற மார்க்கத்தினர் காடுகளில் என்ன பக்தி செய்வார்கள். முன்பெல்லாம் இவர்களும் சதோ பிரதான மானவர்களாக இருந்தார்கள். அச்சமயத்தில் அவர்களுக்கு தேவையான எல்லாமே காட்டிற்கே போய் சேர்ந்து விடும். இப்பொழுதோ பாருங்கள், குடிசைகள் காலியாகி விட்டுள்ளன. ஏனெனில் தமோபிரதானமாக ஆகி இருக்கும் காரணத்தால் அவர்களிடம் எதுவும் போய் சேருவதில்லை. பக்தர்களுக்கு சிரத்தை இல்லாமல் போய் விட்டது. இதே காரணத்தால் இப்பொழுது தொழிலில் ஈடுபட்டு விட்டுள்ளார்கள். கோடீசுவரராக லட்சாதிபதியாக உள்ளார்கள். இப்பொழுது இவை அனைத்துமே முடியப் போகிறது. அப்படி இன்றி இந்த தங்கத்தினால் ஏதோ வீடுகள் அமைக்கப் படும் என்பதல்ல. அங்கோ எல்லாமே புதியதாக இருக்கும். தானியங்களும் புதியது. புதிய உலகத்தில் முதல் தரமான பொருட்கள் இருக்கும். இப்பொழுதோ பூமி அழுகி (வரண்டு) விட்டுள்ளது. அதனால் விளைச்சல் கூட முழுமையாக வெளிப்படுவதில்லை. அங்கோ முழு பூமியும் உங்களுடையது. கடலும் உங்களுடையதாக இருக்கும். அங்கு எவ்வளவு தூய்மையான உணவை உட்கொள்கிறார்கள். இங்கோ பாருங்கள், மிருகங்களைக் கூட சமைத்து சாப்பிட்டு விடு கிறார்கள். அங்கோ இப்பேர்ப்பட்ட விஷயமே கிடையாது. எனவே குழந்தைகளாகிய நீங்கள் பாபாவிற்கு மிகவுமே நன்றி கூற வேண்டும். நீங்கள் தந்தையை அறிந்துள்ளீர்கள் மற்றும் நான் சாதாரண வயோதிக உடலில் இவருடைய வானப் பிரஸ்த நிலையில் பிரவேசம் செய்கிறேன். என்று தந்தைக் கூறுகிறார் என்பதை மற்றவர்களுக்கும் கூறுகிறீர்கள். வானப்பிரஸ்த நிலையில் தான் திரும்பிச் செல்ல வேண்டும். இதுவும் சத்தியம் ஆகும். பக்தியில் கூட இதே பழக்கம் நடக்கிறது. இவை எல்லாமே தாரணை செய்ய வேண்டிய விசயங்கள் ஆகும். ஒரு சிலர் நல்ல முறையில் குறித்துக் கொண்டு தாரணை செய்து மற்றவர்களுக்கும் கூறுகிறார்கள். கேட்கும் பொழுது மிகவும் ஆனந்தமாக இருக்கும். ஏனெனில் இப்பொழுது ஆதரவு கிடைத்துள்ளது.

ஒவ்வொரு ஆத்மாவும் புருவமத்தி என்ற பீடத்தில் வீற்றிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர் கள். புருவமத்தியில் பிரகாசிக்கும் அதிசயமான நட்சத்திரம் என்று ஆத்மாவிற்குத் தான் கூறுகிறார்கள். ஆனால் ஆத்மா பிரகாசிக்கிறது ஆத்மாக்கள் சகோதர சகோதரர்கள் ஆவார்கள். எனவே தான் ஹிந்துஸ்தானியர், பாகிஸ்தானியர், பௌத்தர்கள் எல்லோருமே சகோதர சகோதரர் கள் ஆவார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் சகோதரர் என்பதன் பொருள் புரியாமல் உள்ளார்கள். உங்களுக்குள் எவ்வளவு அன்பு இருக்க வேண்டும். சத்யுகத்தில் மிருகங்க ளுக்கிடையேயும் அன்பு இருக்கும். நீங்கள் சகோதர சகோதரர்கள் ஆவீர்கள். எனவே எவ்வளவு அன்பு இருக்க வேண்டும். ஆனால் தேக அபிமானத்தில் வந்து விடும் காரணத்தால் ஒருவர் மற்றவரிடம் மிகவும் துன்பப்பட்டுப் போகிறார்கள். பிறகு ஒருவர் மற்றவரை நிந்தனை செய்கிறார்கள். இச்சமயத்திலோ குழந்தைகளாகிய நீங்கள் தங்களுக்குள் மிகவும் பால் பாயாசம் போல (இனிமையாக) ஆகி இருக்க வேண்டும். இச்சமயத்தில் நீங்கள் இந்த புருஷார்த்தம் (முயற்சி) செய்யும் காரணத்தால் 21 பிறவி களுக்கு பால் பாயாசம் போல ஆகி நடக்கிறீர்கள். ஏதாவது தவறான வார்த்தை உங்கள் வாயிலிருந்து வந்து விட்டால், உடனே மன்னித்து விடுங்கள் என்று கூற வேண்டும். ஏனெனில் மிகவும் இனிமையானவராக ஆகி நடக்க வேண்டும் என்பது பாபாவின் கட்டளை ஆகும். யார் கட்டளையை ஏற்பதில்லையோ அவர்கள் இறைவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் என்று கூறப்படு வார்கள். ஒரு பொழுதும் யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது. மற்றபடி சிப்பாயினுடைய சேவையில் நேர்மையாக இருக்க வேண்டும் என்றால் ஒருவரைக் கொல்ல வேண்டியும் இருக்கும் என்பதை பாபா அறிந்துள்ளார். இராணுவத்தினர் சண்டையிடவும் வேண்டி இருக்கும். தன்னை ஆத்மா என்று உணர்ந்து என் ஒருவனை நினைவு செய்தால் போதுமானது படகு கரையேறி விடும். இந்த பழைய உலகத்தில் என்ன பார்ப்பதற்குள்ளது? நாமோ புதிய உலகத்தைப் பார்க்க வேண்டும். இப்பொழுதோ ஸ்ரீமத் மூலமாக புதிய உலக ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இதில் ஆசீர்வாதத்தின் எந்த விஷயமும் கிடையாது. ஆசிரியர் ஒரு பொழுதும் ஆசீர்வாதம் புரிவதில்லை. ஆசிரியரோ கற்பிக்கிறார். யார் எந்த அளவு படிக்கிறார்கள், நல்ல நடத்தையை (மேனர்ஸ்) தாரணை செய்கிறார்களோ அதற்கேற்ற பதவி அடைகிறார்கள். இதிலும் கூட அவ்வாறே உள்ளது. நாம் எப்படி நடக்கிறோம் என்று நமது பதிவேட்டை நாமே பார்க்க வேண்டும். ஒரு சிலரோ மிகவுமே இனிமையானவராக ஆகி நடக்கிறார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் திருப்தியாக இருக்கிறார்கள். எந்த ஒரு தவறும் ஏற்படாமல் இருக்கிறதா என்பது பற்றி தங்களுக்குள் விவாதித்துக் கொள்ளுங் கள் என்று பாபா கூறியுள்ளார். ஆனால் விசாரணை நடத்துபவர்கள் நான் ஆத்மா ஆவேன், நான் என் சகோதர ஆத்மாவிடம் எந்த ஒரு தவறும் ஏற்படவில்லையே என்று கேட்கிறேன் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். எவரொருவருக்கும் துக்கம் ஏதும் கொடுக்கவில்லையே? தந்தை ஒரு பொழுதும் துக்கம் கொடுப்பதில்லை. தந்தையோ சுகதாமத்திற்கு அதிபதியாக ஆக்குகிறார். தந்தையோ துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவராகவே இருக்கிறார். எனவே நீங்கள் கூட அனைவருக் கும் சுகம் கொடுக்க வேண்டும். தப்பும் தவறுமாக ஒரு பொழுதும் பேசக் கூடாது. ஒரு பொழுதும் தங்கள் கையில் சட்டத்தை எடுக்கக் கூடாது. உங்கள் வேலை புகார் கொடுப்பது மட்டுமே ஆகும். மிகவும் இனிமையானவர் ஆக வேண்டும். எவ்வளவு இனிமையானவர்களாக ஆவீர்களோ அந்த அளவு தந்தையை வெளிப்படுத்துவீர்கள். பாபா அன்பின் கடல் ஆவார். நீங்கள் கூட அன்புடன் புரிய

வைத்தீர்கள் என்றால் உங்களுக்கு வெற்றி ஏற்படும். எனது செல்லமான குழந்தைகளே ஒரு பொழுதும் யாருக்கும் துக்கம் கொடுக்காதீர்கள் என்று தந்தை கூறுகிறார். தப்பும் தவறுமான காரியங்கள் செய்வது, கோள் மூட்டுவது, பழி வாங்குவது, பொறாமைப் படுவது இவை எல்லாம் கூட விகர்மங்கள் ஆகும் அல்லவா? இவ்வாறு செய்பவர்கள் கூட அநேகர்கள் இருக்கிறார்கள்.

யார் நல்ல விசுவாசமுடைய சர்விசபிள் (சேவை செய்யும்) குழந்தையாக இருப்பாரோ அவர் அவசியம் எனக்கு இனிமையானவராகப் படுவார். அவருக்கு செல்லம் கூட கொடுப்பார். மற்றவர் களுக்கு கொடுக்க மாட்டார் என்று பாபா கூறுகிறார். பிறகு இவர்களுக்கு மட்டும் உபசாரம் ஆகிறது. இவர் பெரிய மனிதர் ஆவார் போலும் என்று கூறுகிறார்கள். இது போல நிறைய தீங்கு செய்கிறார்கள். தப்பும் தவறுமான காரியங்கள் செய்து பழி போடுகிறார்கள். குறிப்பிட்ட இன்னார் பீடியை விடுவதில்லை என்று சமாசாரம் வருகிறது. உங்களால் யோக பலத்தினால் உலகத்தை தூய்மையாக ஆக்க முடியும். இந்த பழக்கத்தை உங்களால் விட முடியாதா என்று அவருக்கும் புரிய வைக்க வேண்டி உள்ளது என்று பாபா கூறுகிறார். தந்தையை நினைவு செய்யுங்கள். பாபா அழிவற்ற மருத்துவர் ஆவார். எல்லா துக்கங்களும் விலகிப் போய் விடும்படியான மருந்து கொடுப்பார். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தேக அபிமானத்தில் வந்து ஒருவரையொருவர் துன்பப்படுத்தக் கூடாது. ஒவ்வொரு விஷயத்திலும் இணக்கமாக இருக்க வேண்டும். ஒரு பொழுதும் கோள் மூட்டக் கூடாது. பழி வாங்குவது, பொறாமைப் படுவது கூடாது. யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது. தங்களுக்குள் மிகவும் இனிமையாக பால் பாயசம் போல ஆகி இருக்க வேண்டும்.

2. அதிகாலை எழுந்து அன்புடன் தந்தையை நினைவு செய்ய வேண்டும். தங்களுக்குத் தாங்களே உரையாட வேண்டும். சிந்தனைக் கடலை கடைந்து பாபாவிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

வரதானம் : தனது சக்திசாலியான ஸ்திதியில் நிலைத்திருந்து மனதின் மூலம் சேவை செய்யக் கூடிய நம்பர் ஒன் சேவாதாரி ஆகுக.

யாருக்காவது வார்த்தைகளின் சேவைக்கான வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும் மன சேவைக்கான வாய்ப்பு ஒவ்வொரு நேரத்திலும் இருக்கவே செய்கிறது. சக்திசாலியான மற்றும் மிக உயர்ந்த சேவை மன சேவையாகும். வார்த்தைகளின் சேவை எளிது, ஆனால் மன சேவைக்காக முதலில் தன்னை சக்திசாலியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஸ்திதி முன்பின் இருந்தாலும் வார்த்தைகளின் சேவை செய்து விட முடியும். ஆனால் மன சேவை இவ்வாறு செய்ய முடியாது. யார் தனது சிரேஷ்ட ஸ்திதியின் மூலம் சேவை செய்கிறார்களோ அவர்களே நம்பர் ஒன் சேவாதாரி, அவர்களே முழு மதிப்பெண்களையும் அடைய முடியும்.

சுலோகன்: லௌகீக காரியம் செய்தாலும் அலௌகீக அனுபவம் செய்வது தான் சமர்ப்பனம் ஆவதாகும்.

அவ்யக்த அமைதியின் மூலம் டபுள் லைட் பரிஸ்தா ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

இப்பொழுது டபுள் லைட் ஆகி தெய்வீக புத்தி என்ற விமானத்தின் மூலம் மிக உயர்ந்த குடுமி ஸ்திதியில் நிலைத்திருந்து அனைத்து ஆத்மாக்களுக்கும் லைட் மற்றும் மைடின் சுப பாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பம் என்ற சகயோகத்தின் அலையை பரப்புங்கள். இந்த விமானத்தில் பாப்தாதாவின் ரீபைன் சிரேஷ்ட வழி என்ற சாதனம் (பெட்ரோல்) இருக்க வேண்டும். அதில் சிறிதளவும் மனவழி, பிறரது வழி என்ற அசுத்தம் இருக்கக் கூடாது.